# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 24 திங்கட்கிழமை 08.09.2025 கதிர் 303



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் செப்டெம்பர் 22 முதல் 24 வரை விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனம்!



யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்இம்மாதம்22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் 937 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் பதிவு செய்யப்படவில்லை.

எனினும், யாழ். மாவட்டத்தில் பருவ மழைக்காலம் ஆரம்பிக்கவிருப்பதால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைக்கும் நோக்குடன் கடந்த செப்டெம்பர் 4ஆம் திகதி மாவட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

7➤

# தேவைப்பட்டால் உரிய நேரத்தில் நாடாளுமன்றம் வருவார் ரணில்

## ஐக்கிய தேசியக் கட்சி அதிரடி அறிவிப்பு



**கொழும்பு, செப். 08**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேவைப்பட்டால் சரியான நேரத்தில் நாடாளுமன்றத்துக்குள் நுழைவார் என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.**

**இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,**

**“கட்சி உறுப்பினர்களிடம் இருந்து ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்குள் செல்வது குறித்து பரிசீலிக்க வேண்டும் என அழைப்புகள் வந்துள்ளன. ஆனால், தற்போது அவ்வாறு செய்யும் எண்ணம் அவருக்கு இல்லை.**

**ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்துக்குள் நுழையுமாறு மற்ற அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.**

7➤

# மலையக அதிகார சபை மீது கை வைக்காதீர்!

## ஜனாதிபதிக்கு த.மு.கூ. தலைவர் மனோ கடிதம்



கொழும்பு, செப். 08

“2018 ஆம் வருட 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நாம் எமது நல்லாட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, “மலையக அதிகார சபை” என எம்மால் அறியப்படும் “பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை”யை

7➤

# நிமல் லான்சாவுக்குப் பிணை



நீர்கொழும்பு, செப். 08

முன்னாள்இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவைப் பிணையில் விடுவிக்குமாறு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிமல் லான்சா

7➤

# எரிந்த நிலையில் ஆணின் சடலம்: அடையாளம் காணப்படவில்லை!



மன்னார், செப். 08

தலைமன்னாரில் காட்டுப் பகுதிக்குள் சற்று எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் இன்னும் அடையாளம் காணப்படவில்லை

அந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார்

7➤

# தேயிலை பறித்துக் கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் சடலமாக மீட்பு



தலவாக்கலை, செப். 08

தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா ரதெல்ல வங்கி ஓயா கீழ் பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த ஆண் தொழிலாளி ஒருவர் தேயிலை மலையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நானுஓயா ரதெல்ல வங்கிஓயா கீழ் பிரிவைச் சேர்ந்த

7➤



# இன்று முதல் கடுமையாகும் போக்குவரத்து சட்டம்

கொழும்பு, செப் .08

போக்குவரத்து சட்டம் இன்று முதல் கடுமையாக அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்காக வாகனங்களை சோதனை செய்ய நாடு முழுவதும் பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்திற்கு தகுதியற்ற வாகனங்கள் மற்றும் வண்ணங்கள் மாற்றப்பட்ட வாகனங்கள் குறித்தும் இதன்போது சோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெவ்வேறு வண்ணங்களில் கூடுதல் விளக்குகளுடன் இயங்கும் வாகனங்கள், வாகனங்களின் முன், பின் மற்றும் இரு பகுதிகளின் சித்திர வடிவமைப்புகள் மற்றும் விளம்பரங்கள் பிரசுரித்தல் மற்றும் சட்டவிரோத மேலதிக உதிரி பாகங்கள் தொடர்பிலும் சோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதிக சத்தம் எழுப்பும் ஒலிப்பான் மற்றும் அதிக சத்தம் எழுப்பும் சைலன்சர்கள் கொண்ட வாகனங்கள் தொடர்பாக இன்று முதல் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார். (ஐ)

# திருகோணமலையில் தீ வைக்கப்படும் வைக்கோல்கள்: உணவின்றித் தவிக்கும் கால்நடைகள்

திருகோணமலை, செப் .08

திருகோணமலையில் வைக்கோலுக்குத் தீ வைப்பதால் கால்நடைகள் மற்றும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை நெல் அறுவடை முடிந்துள்ள நிலையில், வயல்வெளிகளில் விவசாயிகள் வைக்கோலுக்குத் தீ வைக்கும் வழக்கம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், கந்தளாய், வான் எல, வட்டுக்கச்சி மற்றும் தம்பலகாமம் போன்ற பகுதிகளில் இந்த நடைமுறை, கால்நடைகள் மற்றும் பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறுவடைக்குப் பிறகு மிஞ்சியிருக்கும் வைக்கோல், அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் முக்கிய உணவாக உள்ளது.

இருப்பினும், விவசாயிகள் வைக்கோலுக்குத் தீ வைப்பதால், கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் உணவின்றித் தவித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைக்கோல் எரிப்பதால் ஏற்படும் புகை மூட்டம், அருகிலுள்ள வீதிகளையும் கிராமங்களையும் சூழ்ந்து



கொள்வதனால், வீதிகளில் வாகனங்கள் செல்வது கடினமாகி, போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த புகை கிராம மக்களுக்கும் மற்றும் சுவாசப் பிரச்சனைகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண, காவல்துறையினர் மற்றும் விவசாயத் திணைக்களம் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# 60 ஆவது ஜெனீவா கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த கூட்டத்தொடர் இன்று முதல் ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜெனீவாவில் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத்தொடர் இலங்கைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்று இலங்கையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா கூறியுள்ளார்.

இந்த அமர்வில் நாட்டிற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பான வரைவு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வெளியுறவு அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (ஐ)



# மாகாண சபைத் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிகொள்ளும்! – டில்வின் சில்வா உறுதி

கொழும்பு, செப் .08

மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்றை திறந்து வைத்து நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால், சில சட்ட சிக்கல்கள் இருக்கின்றன.

குறிப்பாக, கடந்த அரசாங்கம் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டது.

அதற்கமைய, புதிதாக எல்லை நிர்ணயம் செய்ய



வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக செய்யப்பட்ட எல்லை நிர்ணயத்தில் பல்வேறு தவறுகள் இருந்தமையால் நாடாளுமன்றத்தில் அது நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியவில்லை.

இந்தநிலையில், புதிதாக மீண்டும் எல்லை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்து, எல்லை நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கமைய, ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிக் கொண்டது போன்று மாகாண சபைத் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிகொள்ளும் என மக்கள் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ.நா.வில் பல தடைகள் இலங்கைக்கு விதிக்கப்படலாம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் இலங்கைக்கு அதி முக்கியத்தும் வாய்ந்ததாக அமையவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரைக்கப்பட்டவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறில்லை எமக்கு பெரும் ஆபத்து காத்திருக்கிறது. அதாவது குறித்த பரிந்துரைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இருந்து நியூயோர்க்கில் உள்ள ஐ.நா பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டு பொதுச் சபையால் பாதுகாப்புப் பேரவைக்கு பாரப்படுத்தலாம்.

பாதுகாப்புப் பேரவையில் வீட்டோ பவரை எந்த நாடும் பயன்படுத்தா விட்டால் எமது நாட்டுக்கு பல தடைகள் வித்திக்கப்பட கூடும் என போராசிரியர் பிரிதீபா மாஹாநாம தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் அண்மையில் 13 பக்கங்களை கொண்ட எழுத்துமூல அறிக்கை ஒன்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கை கடைபிடிக்க வேண்டியவை தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதற்கு ஒன்றிணைந்த பங்களிப்பை வழங்குமாறு குறிப்பிடப்பட்டிருந்ததை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அது சாதகமான நிலையாகும். சுயாதீன இராச்சியமாக நாம் அவற்றுக்கு கட்டுப்படவில்லை.

ஆனால் எமக்கு எதிரான பரிந்துரைகளை முன்வைக்க அமெரிக்காவே சமபங்களிப்பை வழங்கியது. ஆனால் இம்முறை அமெரிக்க பிரதிநிதிகள் விலக்கி கொள்ளப்பட்டுள்ளனர். அதனால் இம்முறை பிரிட்டன் எமக்கு எதிரான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

பிரிட்டன் தனிமைப்படுத்தப்பட்டதால் சமபங்களிப்பை வழங்குமாறு எம்முடம் பேச்சுவார்த்தை நடத்தியது. அதற்கு எமது பக்கத்தில் காத்திரமான நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கனடா, மலாவி மொன்றிகோ ஆகிய நாடுகளுடன் ஐந்து நாடுகள் இணைந்தே இலங்கைக் எதிரான தீர்மானங்களை கொண்டுவரவுள்ளன.

அதன் ஒரு அறிக்கையே வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த தீர்மானித்திலுள்ள சில பரிந்துரைகள் நாட்டின் இறைமைக்கும் ஒறுமைப்பாட்டுக்கும் பாதகமானதால் நிராகரிக்கப்பபட்டுள்ளது.

அத்தோடு போர் குற்றம் தொடர்பில் இலங்கைக்கு வெளியே சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை செய்ய வேண்டும் என்கின்றனர். ஆனால் மனித உரிமைகள் தொடர்பிலான பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க முட்பட்டுள்ளது.

ஆனாலும் பிரதானமான பிரச்சினைகள் நான்குக்கு தீர்வு காண வேண்டிள்ளது. ரோம் சாசனத்தில் கையொப்பமிடுதல் அது மிகவும் ஆபத்தானதாகும். மற்றையது பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் கொண்டுவருதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

ஐ.நா.வில் பல தடைகள் இலங்கைக்கு விதிக்கப்படலாம்...! ; துயளைைய உரஅயெ சுைைாவள ஊழஅஅளைளழைெ

இவ்வாறான செயற்பாடுகள் எமக்கு நன்மை பயக்க கூடியதாக அமைந்துள்ளது. மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் அரசின் போக்கு பராட்டப்பட வேண்டியது.

இவ்வாறு உயர்ஸ்தானிகர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டு கொண்டு வருவதால் சாதமான நிலையும் தொன்படாமல் இல்லை. மேலம் இன, மத, வர்க்க பேதங்களின் அடிப்படையிலான பிளவுகளோ அல்லது ஒடுக்குமுறை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவை சாதகமான நிலைப்பாடுகளாக நோக்கலாம். எமக்கு எதிராக தீர்மானத்தை வெற்றிக் கொள்ள 24 நாடுகள் எமக்கு சார்பாக வாக்களிக்க வேண்டும். 47 உருப்பு நாடுகள் காணப்படுகின்றன். இவற்றில் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளை எமது பக்கம் வாக்களிக்க வைக்க வேண்டும்.

இந்தியாவை நாம் வெற்றி கொண்டால் கெரிபியன் நாடுகள் எமக்கு சார்பாக வாக்களிக்க கூடும். மேலும் தென்னாபிக்காவும் எமக்கு முக்கியமான நாடாகும் இந்த நாடுகளை எமது பக்கம் இழுத்துக் கொண்டால் பல வருடங்களாக இழுப்பட்டு திரியும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளுக்கு இலங்கைக்கான ஒரு தீர்மானத்தை முன்வைக்க கூடிய வாய்ப்புகள் காணப்படுகிறது என் கூறியுள ளார். (ஐ)

# வடக்கு உட்பட பல பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை



வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும், குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சில இடங்களில் 75 மி.மீட்டருக்கும் அதிகமான ஓரளவு மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் லேசான மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பிலிருந்து மாத்தறை வரையான கரையோரக் கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

காங்கேசன்துறையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரக் கடற்பரப்புகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கொழும்பிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்று தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகம் மணிக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரை இருக்கும், அவ்வப்போது 50 முதல் 55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

நாட்டைச் சுற்றியுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகம் மணிக்கு 20 முதல் 30 கிலோமீற்றர் வரை இருக்கும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்றும், கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகவும் இருக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாதாள உலக குற்றக் கும்பலுக்கு எதிராக எடுக்கப்படவுள்ள நடவடிக்கை




கொழும்பு, செப் .08

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்கள் ஆகியோர் கொல்லப்பட்ட 11 சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு, நேரடியாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்ற அடிப்படையில், குற்றப்புலனாய்வு திணைக்களம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை சிறைச்சாலை பேருந்துத் தாக்குதலில், பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 'சமயன்' கொல்லப்பட்டமை, கரந்தெனிய மருத்துவர் கொலை, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் காவலில் இருந்த பொறியியலாளர் ஒருவரின் கொலை, 'கொ/ஹவல போபி கொலை,

பொலிஸ் சந்தேக நபர்கள் சம்பந்தப்பட்ட எல்பிட்டிய இரட்டைக் கொலை, போதை பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரி நியோமல் ரங்கஜீவ மீதான கொலை முயற்சியின் போது ஒரு சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டமை, ரத்கம கொலைகள் மற்றும் 'கணேமுல்ல சஞ்சீவ' மீது நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியமை ஆகியவை இந்த வழக்குகளில் அடங்கும்.

இந்த நிலையில், ஒவ்வொரு வழக்குக் கோப்பையும் மதிப்பாய்வு செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஒரு விசேட குழு நியமிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடலூர் மாவட்டத்தில் வேகமாக பரவும் காய்ச்சல்: சிகிச்சை பெற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏராளமானோர் வருகை

கடலூர் மாவட்டத்தில் அதிகளவில் காய்ச்சல் பரவி வருவதால் கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அதிகளவில் குழந்தைகளுடன் பெண்கள் நீண்ட வரிசையில் சிகிச்சைக்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெப்பம் மற்றும் விட்டு விட்டு மழையும் பெய்து வருகிறது. சீதோஷ்ண நிலை காரணமாக பலருக்கும் காய்ச்சல் அதிகளவில் பரவி வருகிறது. இந்நிலையில் கடலூரில் அனைத்து பகுதிகளிலும் சிறியவர் முதல் முதியவர் வரை காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்கள் சளி, இருமல் போன்ற சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த வாரம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களின் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் தற்போது கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நீண்ட வரிசையில் காலை 7 மணி முதல் நீண்ட வரிசையில் சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர்.

அதிகளவில் கூட்டம் கூடும் இடங்களுக்கு குழந்தைகளை அழைத்து செல்வதால் காய்ச்சல் ஏற்பட்டதாகவும், இதனால் மருத்துவர்களை சந்திருப்பதாகவும், அவர்கள் ரத்த பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்தியதாகவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

சுப நிகழ்ச்சிகளில் அதிக அளவில் மக்கள் கூட்டம் கூட்டமாகவே கலந்துகொண்டதே காரணம் எனவும் 2-3 நாட்களுக்கு மருந்து எடுத்துக் கொண்டு ஓய்வெடுத்தாலே போதுமானது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். காய்ச்சலால் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் மாவட்ட நிர்வாகம் பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. (ஐ)








## தமிழ்நாட்டிலும் வாக்குத் திருட்டை நடத்த பாஜக சதி: அடுத்த 8 மாதங்களுக்கு விழிப்புடன் இருக்க பா.சிதம்பரம் அறிவுறுத்தல்

பாஜகவின் சூழ்ச்சியால் பீகார், கர்நாடகாவை போன்று தமிழ்நாட்டிலும் வாக்கு திருட்டு நடைபெற வாய்ப்பு உள்ளதாக காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான பா சிதம்பரம் எச்சரித்துள்ளார். நெல்லை பாளையங்கோட்டையில் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வாக்கு திருட்டை தடுப்போம் ஜனநாயகத்தை காப்போம் என்ற பெயரில் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்று பேசிய கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சருமான பா.சிதம்பரம் கடந்த தேர்தல்களில் பல இடங்களில் தோல்வியை தழுவியதற்கு வாக்கு திருட்டே காரணம் என்று கூறினார்.

பீகார், கர்நாடகாவை தொடர்ந்து மகாராஷ்டிராவிலும் வாக்கு திருட்டு நடைபெற்றதற்கான ஆதாரங்களை ராகுல் வெளியிட உள்ளதாக கூறிய அவர் அந்த நிலை தமிழ்நாட்டிலும் நடைபெற கூடும் என்று எச்சரித்தார்.

அதற்கான சதி வேலையை பாஜக செய்து வருவதாகவும் பா.சிதம்பரம் குற்றம்சாட்டினார். தமிழ்நாட்டில் அடுத்த 8 மாத காலத்திற்கு இந்தியா கூட்டணி கட்சியினர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் பா.சிதம்பரம் கேட்டு கொண்டார். தொடர்ந்து பேசிய தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஜோடங்கர் அடுத்தகட்டமாக வாக்கு திருட்டுக்கு எதிராக 5 கோடி கையெழுத்து பெரும் இயக்கத்தை காங்கிரஸ் நடத்தி இருப்பதாக கூறினார். ஜனநாயகத்தை காப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது என்றும் அவர் பாராட்டினார். அடுத்து நடைபெறும் மாநாட்டில் பங்கேற்க காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜ/ன கார்கே, ராகுல் காந்தி உள்ளிட்டோர் தமிழ்நாடு வர உள்ளதாக மாநாட்டில் பேசிய மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார். இந்த மாநாட்டில் பாஜக முறைகேடுகளுக்கு ஆதரவாக செயல்படும் தேர்தல் ஆணையத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும்: துரைமுருகன் அறிவிப்பு




ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தை நிறைவு செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தமிழகம் திரும்பியுள்ளார். இந்நிலையில், முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் போது இங்கு கட்சியினர் ஆற்றிய பணிகள், செயல்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

சென்னையில் நாளைய தினம் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். நாளை மதியம் 12 மணியளவில் காணொலி வாயிலாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று தலைமைக்கழகம் அறிவுத்தியுள்ளது. இதில் இரண்டு விதமான விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. ஒன்று திமுக முப்பெரும் விழா. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசிக்கப்படும்(ஐ)

## படுக்கை வசதி கொண்ட முதல் வந்தே பாரத் ரயில் தீபாவளிக்கு இயக்கம்



இந்தியாவில் படுக்கை வசதி கொண்ட முதல் வந்தே பாரத் ரயிலை தீபாவளியை முன்னிட்டு டெல்லியில் இருந்து பிரயாக்ராஜ் வழியாக பாட்னா வரை இயக்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. வழக்கமாக இதே வழித்தடத்தில் இயக்கப்படும் ராஜ்தானி ;விரைவு ரயில் டிக்கெட் கட்டணத்தை விட, இது 10-15ூ வரை அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## தொடர் விடுமுறையை கொண்டாட குவிந்த கேரளா சுற்றுலா பயணிகள்



விடுமுறை நாளான நேற்று ஓணம் விடுமுறையை கொண்டாட ஏராளமான கேரள சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்ததால் சுற்றுலா தலங்கள் களைகட்டி காணப்பட்டது.

சர்வதேச சுற்றுலா நகரமான ஊட்டியில் தற்போது இரண்டாவது சீசன் துவங்கியுள்ள நிலையில் சுற்றுலா பயணிகள் வர துவங்கியுள்ளனர். இதனிடையே கேரளாவில் பாரம்பரியம் மிக்க ஓணம் பண்டிகை அனைத்து தரப்பு மக்களாலும் கொண்டாடப்படுகிறது.

ஓணத்திற்கு 10 நாட்களுக்கு முன்பே வீடுகளில் அத்தப்பூ கோலமிட்டு விமர்சையாக கொண்டாடுவார்கள். இந்நிலையில் நேற்று முன்தினம் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்ட நிலையில், வெள்ளிகிழமை மாலை முதலே ஊட்டிக்கு கேரள சுற்றுலா பயணிகள் வர துவங்கினர். இந்த தொடர் விடுமுறை காரணமாக ஊட்டி நகரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள ஓட்டல்கள், லாட்ஜ்கள், காட்டேஜ்களில் அறைகள் நிரம்பின.

இந்நிலையில், நேற்று பகலில் வழக்கத்திற்கு மாறாக இதமான காலநிலை நிலவியதால் ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபெட்டா சிகரம், பைக்காரா படகு இல்லம், நீர்வீழ்ச்சி உள்ளிட்ட இடங்களில் கேரள சுற்றுலா பயணிகள் கூட்டத்தை காண முடிந்தது.

ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டி படகு இல்லத்தில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்பட்ட நிலையில், ஊட்டி நகரில் உள்ள முக்கிய சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இவை உடனுக்குடன் சரி செய்யப்பட்டது. மதியத்திற்கு பின் கூட்டம் மெல்ல மெல்ல குறைய துவங்கியது. (ஐ)



# “வரைமுறை” காட்டும் வாழ்க்கை

முதலில் ‘வரைமுறை’ என்பது ‘எல்லையை’ குறிப்பிடுகிறது. அது இடத்தின் எல்லையையையோ, அல்லது ஏதாவது ஒரு செயலை பற்றி அல்லது நிகழ்வை பற்றி விவரிப்பதோ அல்லது அதன் மீது ஈடுபாடு காட்டுவதற்கோ ‘ஓரளவு’ மட்டுமே என்னும் ‘எல்லை’ அல்லது ‘முடிவு’ இருக்கும். அதற்கு மேல் அந்த நிகழ்வு, செயல் தனக்குள் கண்ணுக்கு தெரியாத ஒரு சட்ட எல்லையை வகுத்திருக்கும். இதுதான் அதன் வரைமுறை.

அடுத்து “திட்டமிடல்” என்றும் ஒரு குறிப்பு இருக்கிறது. ஒரு காரியத்தை செயல்படுத்துவதற்கு முன் ‘இப்படி செய்யவேண்டும்’ என்று ஒரு திட்டமிடலை ‘வரைமுறை’ என்றும் குறிப்பிட்டு சொல்லலாம்.

அடுத்து ஓவியமோ, படமோ அதை வரையும் முயற்சியை ‘வரை முறை’ என்று சொல்லி விடலாம்.

வரை என்பது ‘வரம்பு’ ‘எல்லை’ இப்படி பொருள் கொள்ளலாம்.

இனி நாம் நம்முடைய வாழ்க்கையின் செயல்பாடுகளுக்குள் நுழை வோம். ஒவ்வொருவருவரும் ஏதோவொரு வகையில் ஒரு எல்லை கோட்டை தங்களுக்குள் அல்லது தங்களின் அன்றாட செயல்பாடுகளுக்குள் போட்டு கொண்டு அதன்படி வாழ்கிறார்கள்.



இந்த விசயத்தில் சாதாரண மனிதர்கள் முதல் மிக பெரிய மனிதர்கள் வரை தங்களின் மனதுக்குள் இந்தகைய கோட்பாட்டை கடைபிடித்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதியாக சொல்லலாம்.

பெரும் விவாதங்கள் கூட ஒரு கட்டத்தில் நிறுத்தப்பட்டு சட்டென இயல்பான செயல்பாட்டுக்குள், கொண்டு செல்வதை பார்த்திருப்போம். அத்தகைய செயல்பாடு நமக்கு உணர்த்துவது என்னெவென்றால் “போதும்” இந்த பிரச்சினையை பற்றி விவாதித்தது. இதற்கு மேல் போனால் இந்த நிகழ்ச்சி விவாத எல்லையை தாண்டி அடுத்த ‘வன்முறை’ ‘தாக்குதல்’ என்னும் எல்லைக்குள் நுழையலாம். அதனால் இத்துடன் நிறுத்தி கொள்வோம், என்று இந்த பிரச்சினை இடம்மாற்றி விடப்பட்டு விடுகிறது.

தனி மனித உணர்வுகளை கவனித்து பாருங்கள், நிறைய பேர் இது போன்ற வரைமுறையை வகுத்து கொண்டு அதை தாண்ட முடியாமல் தடுமாறுவார்கள்.

ஒருவனது அன்றாட பழக்க வழக்கங்களை எடுத்து கொள்ளுஙாங்கள். இதை ஒரு வரைமுறைக்குள் வைத்து கொண்டிருப்பார்கள். அதாவது இந்த இடத்தில் வரைமுறை என்பது “கோட்பாடுடைய பழக்கவழக்கங்களுக்குள்” என்றும் பொருள் படுத்தி கொள்ளலாம்.

ஆறு மணிக்கு எழுந்திருப்பவன், அடுத்தடுத்து என்று அவர்கள் தனக்குள் வைத்துக்கொண்டிருக்கும் பழக்கங்களின்படி, அன்றைய நாளின் வாழ்க்கைக் குள் சென்று கொண்டிருக்கும் அவர்களின் வாழ்க்கை திடீரென்று ஒரு சில நாட்களில் செயல்பாடுகள் வித்தியாசப்படும் போது அவர்களின் “அன்றாட வாழ்க்கை வரைமுறை” பாதிக்கப்படும்.

உதாரணமாக நாளை நாலுமணிக்கு எழுந்து ஒரு இடத்துக்கு போகவேண்டும் என்னும் சாதாரண செயல்பாடே அவனுக்கு பெரிய மலையாய் தெரியும். அவனால் நாலு மணிக்கு எழுவது என்பது அவனது வரைமுறையை தாண்டும் செயல். என்ன செய்வது? தட்டு தடுமாறி அதை நடை முறை படுத்த முயற்சிக்கிறான்.

இது போலத்தான் தனிமனித்னைன் புகைபிடிக்கும் பழக்கம் முதல் அதை எப்பொழுது எப்படி என்பது வரை ரு வரைமுறையை தனக்குள் வகுத்து கொள்கிறான்.

“ திட்டமிடல்” என்பது நாம் ஒரு காரியத்தை செய்யப்போவதற்கு முன் இப்படி செய்யும்போது இப்படி நடக்கும், அப்படி நடந்தால்..? அதற்கு தகுந்தாற் போல் அடுத்த செயல்பாட்டை நடைமுறைபடுத்த வேண்டும். என்று ஏற்கன வே யோசித்து செயல்படுவதற்கு ‘வரைமுறை’ என்றும் பொருள் கொள்ளலாம்.

இதுவரை வரைமுறையை பற்றி ஓரளவு கருத்துக்கள் சொல்லப்பட் டாலும் இந்த “வரைமுறை” என்பது எப்படி நம்மை சிரமபடுத்துகிறது வாழ்க்கையை என்றும் நாம் பார்க்கலாம்.

அன்றாட வாழ்க்கையில் ஒரு சில வரைமுறைகளை வைத்திருக்கும் பழக்கம் மாறிப்போனால் சிரமபட்டு விடுகிறோம். மதியம் “இவ்வளவுதான் சாப்பிடுவோம்” என்னும் அளவு கோளில் இருப்பவர்களிடம் கொஞ்சம் அதிகம் குறைவு இப்படி மாறி வரும்போது தடுமாறி போகிறார்கள். இது சாதாரண சாப்பாட்டு சிக்கல் மட்டுமல்ல, அடுத்த எல்ல பழக்கங்களும் மாறும்.

இதே போல் தவறான கொள்கையை வைத்து அதன் “வரைமுறைப்படி” வாழும் ஒரு தனி மனிதன் அது தவறு என்று பலர் பல முறை சுட்டி காட்டினாலும் அதிலிருந்து வெளி வர விரும்பமாட்டான். இதன் மூலம் பல தடவை பிறரால் “அந்த ஆள் அப்படிபட்டவன்” சொன்னாலும் கேக்கமாட்டான் என்று அவனை ஓரங்கட்டவும் வாய்ப்பு உண்டு.

தனி மனிதர்கள் மட்டுமல்ல இந்த உலகத்தில் இயங்கும் இயக்கங்கள் அனைத்துமே ஒரு வித வரைமுறைக்குள் தான் இயங்கி கொண்டிருக்கிறது. இதை மாற்ற முயற்சிக்கும் போது எதிர்பாராத நிகழ்வுகளை சந்திக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் சில நேரங்களில் எதிர்பாராத பலன்களும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

அதனால்தான் “மாற்றி யோசி” என்னும் மந்திரத்தை உபயோகித்து வழக்கமாய் நடைபெறும் ஒரு நிகழ்வை, அல்லது செயலின் வரை முறைகளை சற்று மாற்றி அமைத்து மற்றவர்களின் வெற்றியை பறித்து விடுகிறார்கள்.

**இனி நாம் நம்முடைய வாழ்க்கையின் செயல்பாடுகளுக்குள் நுழை வோம். ஒவ்வொருவருவரும் ஏதோவொரு வகையில் ஒரு எல்லை கோட்டை தங்களுக்குள் அல்லது தங்களின் அன்றாட செயல்பாடுகளுக்குள் போட்டு கொண்டு அதன்படி வாழ்கிறார்கள். இந்த விசயத்தில் சாதாரண மனிதர்கள் முதல் மிக பெரிய மனிதர்கள் வரை தங்களின் மனதுக்குள் இந்தகைய கோட்பாட்டை கடைபிடித்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதியாக சொல்லலாம்.**

அந்த கால புராண இதிகாசங்கள் முதல் இன்று வரும் கதைகள் வரை தனிப்பட்ட ஒருவனின் “வரைமுறை” வாழ்க்கை முறையை குலைப்பதின் மூலம், அவனை வாழ்க்கையின் சிக்கலுக்குள் தள்ளி விடமுடியும் என்று சுட்டி காட்டி கொண்டுதான் இருக்கிறது.

அகண்ட வான்வெளி அதில் பல கோள்கள், லட்சக்கணக்கான நட்சத்திரங்கள். ஆனால் அவைகள் எல்லாமே ஒரு வரைமுறைக்குள் செய்ல்பட்டு கொண்டுதான் இருக்கின்றன. நாம் வாழும் பூமியை எடுத்து கொண்டால் அதன் வரைமுறை சற்று மாறினாலும் ஏற்படும் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல.

என்றாலும் “வரைமுறை” பழக்கவழக்கங்கள் தனிப்பட்ட ஒவ்வொருவர்களின் தோள் மீது அமர்ந்து கொண்டு அவர்களை இந்த சமுதாயத்தில் வெற்றிகர மனிதர்களாக உலாவவும் உதவுகின்றன, அதே போல் ஒரு சில நேரங்களில் அவர்களை கவிழ்த்து விடவும் செய்கின்றன என்பதில் எந்த சந்தேகமுமில்லை.



# நேபாளம் நாடாளுமன்றம் நோக்கி இளைஞர்கள் பேரணி: பொலிஸ் துப்பாக்கிச்சூடு

சமூக வலைதளங்களுக்கு தடை விதித்ததை எதிர்த்து நேபாளம் நாடாளுமன்றம் நோக்கி இளைஞர்கள் பேரணி சென்றனர். நாடாளுமன்றம் நோக்கி பேரணியாக சென்ற ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் மீது போலீசார் தடியடி, துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். இளைஞர்களின் போராட்டத்தை அடுத்து காத்மாண்டுவில் அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது. மேலும், வாட்ஸ் ஆப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், எக்ஸ் உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டது க்கப்பட்டது. நேபாளத்தில் பல்வேறு நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)



# பல நாடுகளுக்கு இடையிலான 7 யுத்தங்களை நான் நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பேட்டி

*பல நாடுகளுக்கு இடையிலான 7 யுத்தங்களை நான் நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பேட்டி அளித்துள்ளார். போர் என்பதே மனித ஆற்றலையே வீணடிக்கும் மோசமான செயல். ரஷ்யா–உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று டிரம்ப் உறுதி அளித்துள்ளார். போர் சம்பந்தமான எதுவும் தனக்கு மகிழ்ச்சி அளிப்பதில்லை.*

*அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் போர் நிறுத்த நிபந்தனைகளை ஏற்குமாறு ஹமாஸை கடைசியாக எச்சரித்தார். ட்ரம்ப் தனது அறிக்கையில், தான் வழங்கிய நிபந்தனைகளை இஸ்ரேல் தரப்பு ஏற்றுக்கொண்டதாகவும், ஹமாஸ் அதே முடிவை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். "கைதிகள் வீடு திரும்ப வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள்"*

*கைதிகள் தாயகம் திரும்ப வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள்! இஸ்ரேலியர்கள் எனது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்கள், ஹமாஸ் அவர்களையும் ஏற்க வேண்டிய நேரம் இது."*

*(ஐ)*

# ரஷ்யாவின் எம்.ஆர்.என்.ஏ. தொழில்நுட்பத்தில் தயாரான புற்றுநோய் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வருவதாக அறிவிப்பு




ரஷ்ய வின்ஞானிகள் உருவாக்கி உள்ள புற்றுநோய் தடுப்பூசி மருத்துவ பயன்பாட்டிற்கு தயாராக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சில கொரோனா தடுப்பூசிகளை போல எம்.ஆர்.என்.ஏ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி என்ட்ரோமிக்ஸ் என்ற புற்றுநோய் தடுப்பூசியை ரஷ்யா உருவாக்கி உள்ளது. புற்றுநோய் செல்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டும் புரதங்களை உற்பத்தி செய்ய எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசிகள் உடலின் செல்களுக்கு கற்று கொடுக்கின்றன.

3 ஆண்டு பரிசோதனை உட்பட பல ஆண்டுகால ஆராய்ச்சியின் முடிவில் இந்த தடுப்பூசி மருத்துவ பயன்பாட்டிற்கு வருவதாக ரஷ்ய மருத்துவ மற்றும் உயிரியல் நிறுவன தலைவர் வெரோனிகா தெரிவித்துள்ளார். இந்த தடுப்பூசி பலமுறை செலுத்தினாலும் பாதுகாப்பானது என கூறிய அவர் புற்றுநோயின் வகையை பொறுத்து கட்டிகள் 60 சதவீதமுதல் 80 சதவீதம் வரை சுருங்கின. பெருங்குடல் புற்றுநோயை இலக்காக கொண்டு இந்த தடுப்பூசி தயாரிக்கப்பட்டதாகவும் மூளை புற்றுநோய், தோல் புற்றுநோய் தடுப்பூசி தயாரிப்பு பணிகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வெரோனிக்கா தெரிவித்தார். (ஐ)

# உக்ரைன் மீது ரஷ்யா மீண்டும் தாக்குதல் குண்டுமழையில் 4 பேர் பலி பலர் படுகாயம்



ரஷ்யா – உக்ரைன் இடையே கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரில் உக்ரைனின் சுமார் 20 சதவீத பகுதிகளை ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்துள்ளன. போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் இதுவரை எவ்வித முன்னேற்றத்தையும் எட்டவில்லை. இந்தச் சூழலில், போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டால், அதனைப் பாதுகாக்க பிரான்ஸ், பிரிட்டன் தலைமையில் சர்வதேசப் படை ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ரஷ்யா இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், உக்ரைன் மீதான தாக்குதல்களை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உக்ரைன் முழுவதும் ரஷ்யப் படைகள் இரவு முழுவதும் கொடூர வான்வழித் தாக்குதல்களை நடத்தின. தலைநகர் கீவ்வில் உள்ள அரசு தலைமைச் செயலகக் கட்டிடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், அதன் மேற்கூரை மற்றும் மேல் தளங்கள் சேதமடைந்து தீப்பற்றி எரிந்தன. தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி தீயை அணைத்தனர். இந்தக் கோரத் தாக்குதலில் மட்டும் குறைந்தது 2 பேர் உயிரிழந்தனர், 18 பேர் காயமடைந்தனர். இதேபோல், டினிப்ரோபெட்ரோவ்ஸ்க், சுமி, சபோரிஜியா ஆகிய நகரங்களிலும் ரஷ்யப் படைகள் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தின. இந்தத் தொடர் தாக்குதல்களில் 9 வயது சிறுமி உட்பட பலர் காயமடைந்தனர். நாடு முழுவதும் நடந்த இந்தத் தாக்குதல்களில் மொத்தமாக 4 பேர் உயிரிழந்ததாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## எரிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார், கட்டுக்காரன் குடியிருப்பு கிராம அலுவலகர் பிரிவில் பூலார் குடியிருப்பு காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சடலம் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் மன்னார் பொது வைத்திசாலையின் பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் அல்லது விவரத்தை அறிய விரும்புவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

இது வரையில் இந்தச் சடலத்தைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் இதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக அறியத் தரவும் என மன்னார் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூடி விட, உங்கள் அரசால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாகக் கை விடுங்கள்." - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதி அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நுவரெலியா, கொழும்பு - அவிசாவளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, பதுளை, மொனராகலை, காலி, மாத்தறை, குருநாகல் ஆகிய மாவட்ட பெருந்தோட்டப் பிராந்தியங்களில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிகளில் வளர்ச்சி குன்றிய பிரிவினர் என்பதைப் புள்ளி விவரங்கள காட்டுகின்றன.

இது 200 வருட சாபம். இதற்குக் காரணம், இந்தச் சமூகம் இந்த நாட்டின் தேசிய வரம்புக்குள் கொண்டு வரப்படாமல் இன ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டமை ஆகும். இதற்குக் காரணம், இவர்கள் அந்நியர்கள், இவர்கள் தமிழர்கள், இவர்களுக்கு காணி வழங்கக் கூடாது, வீடு வழங்கக் கூடாது, தேசிய கல்வி கட்டமைப்புகள் கொண்டு வரக் கூடாது, தேசிய சுகாதார கட்டமைப்புகள் கொண்டு வரக் கூடாது, பிரஜாவுரிமை வழங்கக் கூடாது என எம் மீது காட்டப்பட்ட, காட்டப்படும் இனவாதம்தான்.

200 வருட ஒடுக்கு முறையில் இருந்து மெல்ல, மெல்ல மீண்டு வரும் இந்தச் சமூகத்தின், கல்வி தரும் பாடசாலைகள், 1976 ஆம் ஆண்டிலேயே தேசிய கல்விக் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டன.

கடைசி தொகுதி குடியுரிமையும் 2003ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டு முழுமை அடைந்தது. ஆகவே, தேசிய வளர்ச்சிப் பாதையில் நாம் தாமதமாகவே நடக்க ஆரம்பித்தோம். இதனால், இந்தச் சமூகம், பின்தங்கிய சமூகமாக இன்றும் இருக்கின்றது.

இந்த இன ஒதுக்கல், கொள்கையை இந்த நாட்டில் அனைத்து பெரும்பான்மைக் கட்சிகளும் முன்னெடுத்தன. இந்தச் சூழலில், இதைக் கணக்கில் எடுத்தே 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த அன்றைய நல்லாட்சி அரசில், தமிழ் முற்போக்குக் கூட்டணியினராகிய நாம் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுத்தோம். அதுவரை மறுக்கப்பட்டு வந்த அல்லது உதாசீனம் செய்யப்பட்டு வந்த, காணி உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை ஆகியவற்றைப் பெற்று எடுக்கும் பெரும் பணியை நாம் ஆரம்பித்தோம்.

இவற்றை வெறும் ஒரு துறை சார்ந்த அமைச்சால் மட்டும் செய்ய முடியாது. அமைச்சுகளுக்கு மேலாக, பல்வேறு துறை சார்ந்த அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்க பட வேண்டும். இந்தப் பிரதான தேவை பின் புலத்தில், மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவை அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபை ஆகும்.

நீங்கள் இன்று இதை, ஓர் அமைச்சின் அங்கமாக மாற்ற முயல்கின்றீர்கள். அமைச்சு என்பதும் அதன் நடவடிக்கைகளும், நாட்டின் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படுகின்றன. நாளை குறிப்பிட்ட அமைச்சு இல்லாமல் போகுமானால், அந்த அமைச்சின் அங்கமும் காணாமல்போய் விடும். ஆனால், அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட திணைக்களங்கள், அதிகார சபைகள், என்பன அமைச்சுகள், அரசுகள் மாறுகின்ற காரணத்தால், மாறி விடாது. காணாமல்போய் விடாது. இந்த அடிப்படை உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு, இந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி அவர்களே, நீங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்று இம்மாதத்துடன் ஒரு வருடம் நிறைவு பெறுகின்றது. வாழ்த்துக்கள். மலையக மக்களுக்கு நிறைய வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். ஆனால், இந்த ஒரு வருடத்தில் சொல்லிக் காட்ட, எடுத்துக் காட்ட, மலையகப் பிராந்தியத்துக்கு உங்கள் அரசு காத்திரமாக எதுவும் செய்து விட வில்லை. ஆனாலும், நாம் பொறுமையாகக் காத்திருக்கின்றோம்.

நீங்கள் எதுவும் செய்யவில்லை என்பதை விட, இன்று, இருப்பதையும் பிடுங்கி எடுக்க முயல்கின்றீர்கள். அதையும் நாம் பொறுமையாக ஏற்றுக்கொண்டு இருக்க முடியாது என்பதை உங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

நீங்கள் செய்ய முயலும் இந்தக் காரியத்தின் பாரதூரத் தன்மையைத் தெரிந்து கொண்டா, அல்லது தெரியாமலா, நீங்கள் செய்கின்றீர்கள் என எனக்கு விளங்கவில்லை. எதுவாக இருந்தாலும், 2018 ஆம் வருட 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நாம் எமது ஆட்சிக் காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, "மலையக அதிகார சபை" என எம்மால் அறியப்படும் "பெருந்தோட்டப் பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை"யை மூடி விட, உங்கள் அரசால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாகக் கைவிடுங்கள் எனக் கோருகின்றேன்." - என்றுள்ளது.

## நிமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிமல் லான்சாவை 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்துதல் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நிமல் லான்சா நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சரணடைந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## தேயிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

59 வயதுடைய மூக்கையா சிவமூர்த்தி என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தேயிலை மலையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நானுஓயா பொலிஸார், மேற்படி நபரின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் அடுத்த கட்டமாக பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களும், கிராம சேவையாளர் தலைமையில் கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டங்களும் எதிர்வரும் செப்டெம்பர் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நடைபெறும்.

பொதுமக்கள் மத்தியில் டெங்குக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 14ஆம் திகதி சகல வணக்கத்தலங்களிலும், 15ஆம் திகதி சகல அரச நிறுவனங்களிலும், 16, 17ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து, யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றன.

இந்தக் காலப்பகுதியில் சகல வீடுகளிலும் வேலைத்தலங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பொது இடங்களிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் சிரமதானப் பணி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இக்காலப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஏற்பாட்டில் மேற்பார்வைக் குழுக்கள் வீடுகளையும் வேலைத்தளங்களையும் கல்வி நிறுவனங்களையும் வர்த்தக நிலையங்களையும் பார்வையிடுவர்.

இந்தக் குழுக்களில் சுகாதாரத் திணைக்கள, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவர். எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்." - என்றுள்ளது.

## தேவைப்பட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் இதில் அடங்குகின்றனர்." - என்றார்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்தால் நல்லது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தங்காலையில் ஐஸ் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள் மீட்பு!

கந்தானை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஐஸ் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு இரசாயனப் பொருளை பொலிஸார் மற்றட்டுள்ளனர். தங்காலையிலும் இது போன்ற இரசாயன தொகுதி மீட்கப்பட்ட நிலையில் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நுவரெலியாவில் செயற்படும் ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலைக்காக இந்த இரசாயண தொகுதிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# "ஹரக் கட்டா" தொடர்ந்து பொலிஸ் தடுப்புக் காவலில்

*குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்லத் திட்டமிடுதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் கும்பலின் தலைவரும் போதைப்பொருள் கடத்தல்காரரான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணைகள் முடிவடையும் வரை அவரைத் தொடர்ந்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கத் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் இன்று திங்கட்கிழமை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.*

*"ஹரக் கட்டா"வுக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் இன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*வழக்கு விசாரணையின் போது "ஹரக்கட்டா" தனிப்பட்ட பாதுகாப்புக்காக சூம் காணொளி அழைப்பு ஊடாக நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி சஜித் பண்டார, பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக்கு அமைய வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை "ஹரக்கட்டா"வைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.*

*ஆனால் "ஹரக்கட்டா" சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, "ஹரக் கட்டா" இரண்டு வருட காலமாகப் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்தார் எனவும், அவரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்க இருக்கும் போது மீண்டும் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கத் தீர்மானித்துள்ளமை தவறாகும் எனவும் தெரிவித்தர்.*

*இதனைக் கருத்தில் கொண்ட நீதிபதி, இந்த வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உத்தரவிட்டார்.*

# பிரசன்னவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 08

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர, மஹர நீதிவான் ஜனிதா பெரேரா முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நீதிமன்றத்தில் சரணடையாமல் பிரதேசத்தைவிட்டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர் அவர் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்துத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk